**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்</u>**

முன்னிலை. திரு. ஜெ. ஆன்ஸ் ராஜா, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாகப்பட்டினம்(மு.கூ.பொ.)

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02ம் நாள் வியாழக்கிழமை

**<u>சுருக்குவிசாரணை வழக்கு எண். 865/2025</u>**

**<u>CNR No: TNNG02-002784-2025</u>**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | நாகப்பட்டினம் நகர காவல் நிலையம், குற்ற எண். 230/2024 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | சுகுமாறன், வயது 48/2024 த/பெ. மாணிக்கவேல், தெற்கு தெரு, சாமந்தான்பேட்டை, நாகப்பட்டினம். |
| 3. | எதிரியின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 28.10.2024 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 28.10.2024 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | NIL |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail) | NIL |
| 11. | Commitment | NIL |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 02.06.2026 |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:20 +0530

| | | |
|---|---|---|
| | (Commencement of trial) | |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 18.06.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence of Order) | 02.07.2026 |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | எதிரிக்கு எதிராக பிரிவு 4A(1a) TN Open Places(Prevention of Disfigureent) Act 1959 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இவ்வழக்கின் எதிரி குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு எதிரான 4A(1a) TN Open Places(Prevention of Disfigureent) Act 1959 ன் கீழான குற்றத்திற்கு ரூ.2,000/-அபராதம் விதித்தும், மேற்படி அபராத தொகையை கட்டத்தவறினால் அதன் பொருட்டு ஒரு மாத கால மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் பிரிவு 278(2)BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br>மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் தடயப்பொருட்கள் இல்லை என்பதால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:28 +0530

| | | |
|---|---|---|
| 17. | பிரிவு 351(1)(ஆ)BNSS ன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s.351(1)(b) BNSS | 18.06.2026 |
| 18. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |
| 19. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | Witnesses / Chief / Cross:<br>PW1 / 02.06.2026 / 02.06.2026<br>PW2 / 02.06.2026 / 02.06.2026<br>PW3 / 03.06.2026 / 03.06.2026 |
| 20. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | Nil |
| 21. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of filing of final report) | |
| 22. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused) | Nil |
| 23. | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof; and) | Nil |
| 24. | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |

Nested table in item 19:

| Witnesses | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 02.06.2026 | 02.06.2026 |
| PW2 | 02.06.2026 | 02.06.2026 |
| PW3 | 03.06.2026 | 03.06.2026 |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:36 +0530

**********

இவ்வழக்கானது ஆம் 17.09.2025 தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 02.07.2026ஆம் தேதியன்று என் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசுத்துறை வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P. ஸ்ரீதரன் பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

1. இவ்வழக்கின் எதிரி சுகுமாறன் என்பவர் கடந்த 28.10.2024 தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் நாகப்பட்டினம் நகர காவல் சரகம், நாகப்பட்டினம் புத்தூர் வடக்கு முச்சந்தியில் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டி வருபவர்களுக்கும் இடையூறாக சுமார் 12x10=1 என்ற அளவுள்ள தமிழக வெற்றி கழக கட்சியின் பேனர் விழுப்புரம் விக்ரவாண்டி மாநாடு தொடர்பாக எவ்வித முன் அனுமதியுமின்றி இவ்வழக்கின் எதிரி புகைப்படத்துடன் கூடிய ஒரு பிளக்ஸ் போர்டை அப்புறப்படுத்தாமல் இருந்ததனை பலமுறை எடுக்க கூறி எச்சரித்தும் கேளாமல் வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4A(1a) TN Open Places(Prevention of Disfigureent) Act படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல் நிலையம் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:43 +0530

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் 230 BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, மேல்நடவடிக்கை எடுப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக கருதி சட்டப்பிரிவு 4A(1a) TN Open Places(Prevention of Disfigureent) Act 1959 கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவிய போது எதிரி அவற்றை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் யாதொரு  சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.1 - ரஞ்சித் தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 28.10.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு புத்தூர் ரவுண்டானா முச்சந்தியில் சுகுமாறன் என்பவர் தமிழக வெற்றி கழகத்தின் கட்சி தலைவர் விஜய் பேனரை விக்கிரவாண்டி மாநாட்டு அழைப்பிதழுக்காக வைத்து கொண்டிருந்ததாகவும், அந்த பேனரானது போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தாகவும், தாங்கள் பலமுறை கூறியும் அவர்கள் அந்த பேனரை அகற்றவில்லை என்றும், அந்த பேனரானது 12 அடி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:50 +0530

அகலம் X 10 அடி நீளம் கொண்ட டிஜிட்டல் பிளக்ஸ் பேனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அ.சா.2 - ரமேஷ் - தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 28.10.2024ம் தேதியன்று சுமார் 11.00 மணியளவில் உதவி ஆய்வாளர் கனகராஜ் மற்றும் தலைமை காவலர் ரஞ்சித் ஆகியோர்கள் புத்தூர் ரவுண்டானா முச்சந்தியில் வடமேற்கு திசையில் டிராபிக்கை அப்புறப்படுத்தி கொண்டு இருந்ததாகவும், சுமார் 12 அடி அகலம் X 10அடி நீளம் கொண்ட சுகுமார் என்பவரின் புகைப்படம் ஒட்டப்பட்ட தமிழக வெற்றி கழக கட்சியின் பிளக்ஸ் போர்டு வடமேற்கு திசையின் புத்தூர் முச்சந்தியில் இருந்ததாகவும், போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததால் அதை அப்புறப்படுத்த சொன்னதாகவும் உதவி ஆய்வாளர் மற்றும் தானும் ரஞ்சித் தலைமை காவலர் அருகில் இருந்த பிளக்ஸ் போர்ட் வைத்து கொண்டிருந்த நபரிடம் கேட்டதாகவும், மேற்படி பிளக்ஸ் போர்ட்டை எதிரி சுகுமார் என்பவரிடம் அலைபேசி மூலம் அகற்ற சொல்லி கேட்டதாகவும், பிறகு காவல்நிலையம் திரும்பி வந்து விட்டதாகவும், பிளக்ஸ் போர்டை அகற்றவில்லை எனவும் அதனால் உதவி ஆய்வாளர் எதிரி மீது முதல்தகவலறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6. அ.சா.3 இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட சுந்தரய்யா - சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில் கடந்த 28.10.2024ம் தேதி காலை 11.00 மணிக்கு நாகப்பட்டின நகர காவல்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:02:57 +0530

நிலைய உதவி ஆய்வாளர் கனகராஜ் மற்றும் தலைமை காவலர்கள் ரஞ்சித் மற்றும் ரமேஷ் ஆகியேர் நாகப்பட்டின நகர காவல் நிலைய சரகரம் நாகப்பட்டினம் புத்தூர் சாலையில் ரோந்து பணியில் இருந்த போது புத்தூர் வடக்கு முச்சந்தி அருகில் எவ்வித அனுமதி இன்றி போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகவும் வாகனம் ஓட்டி வருபவர்களுக்கு இடையூறாகவும் சுமார் 12x10=1 என்ற அளவுள்ள விழுப்புரம் விக்கிரவாண்டி மாநாடு தொடர்பான தமிழக வெற்றி கழக பிளக்ஸ்போர்டை இவ்வழக்கின் எதிரி சுகுமாறன் புகைப்படத்துடன் கூடிய பிளக்ஸ்போர்டை அப்புறப்படுத்தாமல் இருந்ததனை பலமுறை எடுக்க கூறி எச்சரித்தும் பிளக்ஸ்போர்ட் வைத்திருந்ததாக குறிப்பிட்டு எதிரி மீது முதல்தகவலறிக்கை பதிவு செய்து வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சிகளை தனித்தனியே விசாரித்து புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக கடந்த 05.11.2024ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3ன் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்று ஆவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(ஆ)- BNSS ன் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும், வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:04 +0530

8. எனவே, எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

9. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

10. இவ்வழக்கில் கடந்த 28.10.2024 தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் நாகப்பட்டினம் நகர காவல் சரகம், நாகப்பட்டினம் புத்தூர் வடக்கு முச்சந்தியில் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டி வருபவர்களுக்கும் இடையூறாக சுமார் 12x10=1 என்ற அளவுள்ள தமிழக வெற்றி கழக பேனர் விழுப்புரம் விக்ரவாண்டி மாநாடு தொடர்பாக எவ்வித முன் அனுமதியுமின்றி இவ்வழக்கின் எதிரி புகைப்படத்துடன் கூடிய ஒரு பிளக்ஸ் போர்டை அப்புறப்படுத்தாமல் இருந்ததனை பலமுறை எடுக்க கூறி எச்சரித்தும் கேளாமல் வைத்திருந்ததாக காவல்துறையினரால் வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியத்தை பரிசீலனை செய்த போது கடந்த 28.10.2024 ம் தேதியன்று அ.சா.1ம், அ.சா.2ம் மற்றும் பட்டியல் சாட்சி 3ம் நாகப்பட்டினம் புத்தூர் ரவுண்டானா சென்றுள்ளார்கள் என்றும் அப்போது எதிரியானவர் 12 அடி அகலம் X 10 அடி நீளம் கொண்ட தமிழ்நாடு வெற்றி கழக கட்சியின் விக்ரவாண்டி மாநாடு அழைப்பிதழுக்காக பிளக்ஸ் போர்டை வடமேற்கு திசையில் புத்தூர் முச்சந்தியில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:10 +0530

வைத்திருந்தார் என்றும் அதை அகற்றுமாறு எதிரியிடம் தொலைபேசியின் வாயிலாக கேட்டபோது அதை அகற்றவில்லை என சாட்சிமளித்துள்ளார்கள். ஆனால் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 குறுக்கு விசாரணையில் எதிரியின் வழக்கறிஞர் மேற்படி குறிப்பிடப்பட்ட பிளக்ஸ்போர்டானது போலிசாரால் கைப்பற்றப்படவில்லை என்றும், மேற்படி பிளக்ஸ் போர்டு சம்பவயிடத்தில் இல்லை என்றும், மேற்படி பிளக்ஸ் போர்டை கழற்றி காவல்நிலையத்திற்கு கொண்டு வரவில்லை என்றும் குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேலும் அப்போது தமிழ்நாட்டை ஆண்ட தி.மு.க. கட்சியின் அழுத்தத்தின் காரணமாக பட்டியல் சாட்சி 3ஆல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக குறுக்கு விசாரணை செய்துள்ளார்.

12. தற்போது எதிரியானவர் 12 அடி அகலம் X 10 அடி நீளம் கொண்ட டிஜிட்டல் பிளக்ஸ் த.வெ.க. கட்சியின் விக்ரவாண்டி அழைப்பதழ் பேனரை மாவட்ட ஆட்சியரிடம் முன் அனுமதி பெற்றுள்ளார் என்று எதிரிதரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை. எதிரியின் கூற்றானது சம்பவயிடத்தில் பேனரே இல்லை என்பதாகும். ஆனால் எதிரியின் வழக்கறிஞர் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் குறுக்குவிசாரணையில் நாகப்பட்டினத்திலிருந்து விக்ரவாண்டி மாநாட்டிற்கு பெரிய அளவில் கூட்டம் சென்றதாக குறுக்குவிசாரணை செய்துள்ளார். மேலும் எதிரியானவர் த.வெ.க. கட்சியின் நாகப்பட்டின மாவட்ட செயலாளராக உள்ளார் என்பதும் தெரியவருகிறது. ஆகவே, எதிரியானவர் நாகப்பட்டினம் புத்தூர்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:16 +0530

ரவுண்டானா வடக்கு முச்சந்தியில் பேனர் வைத்துள்ளார் என்பது நிரூபணம் ஆகியுள்ளது. மேலும் பேனர் வைப்பது சம்பந்தமாக எதிரியானவர் எவ்விதமான முன் அனுமதியும் பெறவில்லை என்பது நிரூபணம் ஆகியுள்ளது என்பது அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

13. எதிரியிடம் 4A(1a) TN Open Places (Prevention of Disfigureent) Act 1959கீழான குற்றங்களுக்கு எதிரிக்கு எதிராக வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவிய போது கீழ்கண்டவாறு பதிலளித்தார்.

"நான் குற்றவாளி இல்லை"

14. இறுதியாக இந்நீதிமன்றம் எதிரிக்கு எதிரான 4A(1a) TN Open Places (Prevention of Disfigureent) Act 1959ன் கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு 4A(1a) TN Open Places (Prevention of Disfigureent)Act 1959 ன் கீழான குற்றத்திற்கு ரூ.2000/- அபராதம் விதித்தும், மேற்படி அபராத தொகையை கட்டத்தவறினால் அதன் பொருட்டு ஒரு மாத கால மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் பிரிவு 278(2)BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகின்றது. மேலும் இவ்வழக்கில் சான்று பொருட்கள் இல்லை என்பதால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:23 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம் (மு.கூ.பொ)

**இணைப்பு :**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு. ரஞ்சித் - தலைமை காவலர் |
| அ.சா.2. | திரு. ரமேஷ் - தலைமை காவலர் |
| அ.சா.3. | திரு. சுந்தரைய்யா (கூடுதல் சாட்சி - காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 28.10.2024 | முதல் தகவலறிக்கை |

**அரசு தரப்பில் சான்று பொருட்கள்** : இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்** : இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.02 16:03:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம் (மு.கூ.பொ)

**<u>நகல் :-</u>**

மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
4. இவ்வழக்கில் சான்று பொருள் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை.